16.04.2024 OS.No.155/2018

சாட்சி : PW 1 அமுதா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :** (14, 16 பிரதிவாதிகள் வழக்கறிஞர்)

தாவா சொத்து ஆதியில் மூக்கையா அவரது மனைவி வைராத்தாள் ஆகியோருக்கு பாத்தியம். மேற்படி மூக்கையாவுக்கு நான்கு மகன்கள். 1.சுப்பையா, 2.அழகு என்ற அழகப்பன், 3.சண்முகம், 4.சேதுராமன். இதில் சண்முகத்தின் மனைவி மற்றும் மகன், மகள் ஆகியோர்தான் 14 முதல் 16 பிரதிவாதிகள். நான் எனது அம்மாவிடம் சொத்து கேட்டு இந்த வழக்கை போட்டுள்ளேன். நான் அழகு என்ற அழகப்பனின் வாரிசு. மூக்கையா தாவா சொத்தை பொறுத்து அவர் இறக்கும் வரை எந்தவொரு ஆவணமும் எழுதி வைக்கவில்லை ˙என்று சொன்னால் சரியல்ல. மூக்கையா இறக்கும்போது 70 வயதுக்கு மேல் இருக்கும், அப்போது எனக்கு 16 வயது இருக்கும். சேதுராமனை தவிர மூக்கையாவின் மற்ற மகன்கள் இறந்துவிட்டார்கள். தாவா சொத்து தொடர்பாக சமூக நீதிமனற்த்தில் OS.7/2017 என்ற வழக்கு நடந்து வருகிறது. மேற்படி வழக்கு தனுஸ்கொடி அண்ணபூரணி போட்ட வழக்கு அது முடிந்துவிட்டது. அந்த வழக்கில் என்னையும் தரப்பினராக சேர்த்திருந்தார்கள். அந்த 14 முதல் 16 பிரதிவாதிகளை அவ்வழக்கில் சேர்க்கவில்லை. மேற்படி தனுஸ்கொடி என்பவர் எனக்கு மாமா முறை. அண்ணபூரணி அவரது மனைவி. மேற்படி வழக்கை பற்றி இவ்வழக்கில் ஏன் சொல்லவில்லை என்றால் அவர்களுக்கு சொத்தில் பாத்தியம் இல்லை என்பதால் சொல்லவில்லை. அவர்கள் போர்செரியாக பட்டா மாற்றி வைத்திருந்ததால் அவர்களையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளேன். நானும், அவர்களும் சமரசம் ஆகிவிட்டோம் என்றால் ஆகவில்லை. மூக்கையா சேர்வை என் தகப்பனாருக்கு சில சொத்துக்களை பிரித்துக் கொடுத்துள்ளார், அதில் மூக்கையா சேர்வையின் கையெழுத்தை பார்த்துள்ளேன். தாவா சொத்தை தவிர இதர சொத்துக்களை நான்கு மகன்களுக்கும் பிரித்து கொடுத்துவிட்டார். வைராத்தாள் 1995ல் இறந்துவிட்டார். தாவா சொத்தை மூக்கையா சேர்வை தனக்காகவும் தனது மனைவிக்காகவும் வைத்திருந்ததால் தான் அதனை பிரித்து தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தை வைராத்தாள் தான் இறக்கும் வரை கூட்டு அனுபவமாக அனுபவித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு பராமரிப்புக்கு இதுபோக 3 செய் நிலங்கள் வைத்திருந்தார். எனது சித்தப்பா சண்முகம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். வா.சா.ஆ.3 உயில் ஆவணம் இவ்வழக்கிற்காக

எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலில் கண்டுள்ள தேதியில் எனக்கு 2 அல்லது 3 வயதுதான் இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா அனைத்து ஆவணங்களையும் உள்நாட்டு பத்திரமாகத்தான் எழுதி கொடுத்திருந்தார். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த பிரதிவாதிகள் தனது கையெழுத்தை மறுப்பதால் வா.சா.ஆ.3 உயிலில் உள்ள கையெழுத்துக்களை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப தயாராக இருக்கிறேன். இந்த உயில் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அது எனது தாத்தா மற்றும் அப்பத்தாவிடம் தான் இருந்தது. என் அப்பத்தாவிடம் இருந்து என் அம்மா கைக்கு வந்தது. அவ்வாறு எப்போது வந்தது என்று எனக்கு தெரியாது. எனது தாயார் சோலையம்மாள் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியாக இருக்கிறார். அவர் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. நானும், எனது தாயாரும் 4, 5 பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து கொண்டு சண்முகத்தின் வாரிசுகளான 14 முதல் 16 பிரதிவாதிகளின் பாகத்தை மோசடி செய்வதற்காக வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 உயில் ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. ஆனால் எனது தாத்தா எழுதிய மற்ற ஆவணங்கள் கையால் எழுதப்பட்டது. வா.சா.ஆ.3 உயிலை நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி உயிலை என் அம்மாதான் எனக்கு கொடுத்தார். தாவா சொத்தில் 14 முதல் 16 பிரதிவாதிகளுக்கு சண்முகத்திற்கு சேரவேண்டிய 1/4 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அவர்கள் எதிரிடை பாத்திய கோரிக்கை மனு தாக்கல் செய்து தங்கள் பாகத்திற்கு உரிய நீதிமன்ற முத்திரை கட்டணமும் செலுத்தியுள்ளார் என்றால் அதனை நான் பார்க்கவில்லை. மேற்படி எதிர் பாத்திய கோரிக்கைக்கு நான் பதில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும், தற்போது படித்து பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 14 முதல் 16 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிரிடை மனு அனுமதிக்கத்தக்கது என்று சொன்னல் சரியல்ல. இந்த வழக்கானது தள்ளுபடிக்கு உரியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.